*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2023** **21 செப்டம்பர் 2023**

**<u>பத்திரிகை செய்தி</u>**

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் பின்வரும் முக்கியக் கோப்புகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

1. புதுச்சேரியில், நடப்புக் கல்வி ஆண்டு 2023-24 இல் பெருந்தலைவர் காமராஜர் மருத்துவக் கல்லூரிக் குழுமத்தின்கீழ் - 'செவிலியர் கல்லூரி, இந்திரா காந்தி மருத்துவ கல்லூரி & ஆராய்ச்சி நிறுவனம்' என்ற பெயரில் 60 மாணவர்களைக் கொண்ட புதிய செவிலியர் கல்லூரி தொடங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

2. நடப்புக் கல்வி ஆண்டு 2023-24 இல் காரைக்கால் பகுதியில் சுகாதாரத் துறையின் மூலம் - 'செவிலியர் கல்லூரி, அன்னை தெரசா பட்டமேற்படிப்பு & சுகாதார அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம்' என்ற பெயரில் 40 மாணவர்களை கொண்ட புதிய செவிலியர் கல்லூரி தொடங்க ஒப்புதல் அளித்துள்ளார்.